**தலைப்பு 21 – கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 21 – கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 23 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புகள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,425.63 மில்லியனாக இருந்ததுடன், இதில் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 1,330.04 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 95.59 மில்லியன் அதாவது 6.71 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,240.35 | 1,147.43 | 92.92 | 7.49 |
| மூலதனம் | 185.28 | 182.61 | 2.67 | 1.44 |
| மொத்தம் | **1,425.63** | **1,330.04** | **95.59** | **6.71** |

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டிற்காக 20.03.02.01 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்காக ரூபா 120.00 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 169.01 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 49.01 மில்லியனால் அதாவது 40.84 சதவீதத்தால் விஞ்சி வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகிற்து.

| 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தின் சதவீதமாக மிகை |
|---|---|---|---|
| மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை | |
| ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 120.00 | 169.01 | 49.01 | 40.84 |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 02101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 55.00 | 54.96 | 50.00 | 52.48 | 265.00 | 215.14 |

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 19.47 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா.மில்லியன் |
| 6000/0000/00/0016/0181/000 | 16.07 |
| 6000/0000/00/0018/0084/000 | 3.39 |
| 6000/0000/00/0002/0132/000 | 0.01 |
| மொத்தம் | 19.47 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 வருமானக் கணக்கு

கணக்காய்வாளர் தலைமை அதிபதி வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 20.03.02.01 ஆம் இலக்க வருமானக் குறியீட்டுக்குரிய வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானத்தை சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளை சமர்ப்பித்தல் ஆகிய பணிப் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியிடுடிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுசெய்யப்பட்ட தொகைக்கும் திறைசேரி அங்கீகரித்த மதிப்பீடுசெய்யப்பட்ட தொகைக்கும் இடையே 50 சதவீத முரணொன்று அவதானிக்கப்பட்டதுடன், உள்ளபடியான வருமானத்துக்கிடையே 55 சதவீத முரணொன்றும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 262.4 மில்லியன் தொகையான நிலுவை வருமானத்தில் ரூபா 63.8 மில்லியன் 04 வருடம் முதல் 33 வருடம் வரையான காலவீச்சில் நிலுவையாகக் காணப்பட்டது.

(இ) முன்னைய ஆண்டின் போது சுட்டிக்காட்டப்பட்டிருந்த அரசாங்கத்திற்கு சொந்தமான, நிறுவனத்தை மூடுதல், ஒன்றிணைத்தல், மீளமைத்தல், விற்பனை செய்தல் போன்ற காரணங்களின் அடிப்படையில் தற்போது செயற்படாத நிறுவனங்களிலிருந்து அறவிடமுடியாதிருந்த நிலுவை கணக்காய்வு கட்டணமான ரூபா 6,555,758 தொகை தொடர்பாக அந்த நிறுவனங்களின் தற்போதைய நிலையை திறைசேரி செயலாளருக்கு விளக்கமளிக்கப்பட்டு நிலுவைக் கணக்காய்வு கட்டணத்தை பதிவழிப்பதற்கு தேவையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக திணைக்களத்தின் கணக்காய்வு கட்டண பிரிவினால் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) லொத்தர் சீட்டிழுப்பு மேற்பார்வை மற்றும் கணக்காய்வு செய்தலுக்காக திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய கணக்காய்வு கட்டண வருமானத்தில் மேற்பார்வை உத்தியோகத்தர்களின் படிகள், பெறுமதி சேர் வரி கழிக்கப்பட்டதன் பின்னர் மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்கு கிடைத்த ரூபா 3,848,600 தொகையான தேறிய தொகை கணக்காய்வு கட்டண வருமானமாக (20.03.02.01) இனங்காணப்படாது 20.03.99.00 ஆம் இலக்க ஏனைய வருமானக் குறியீட்டின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) கணக்காய்வு கட்டணத்திற்காக சிட்டை இடுவதற்கு முன்னர் கணிப்பிடப்பட்ட கணக்காய்வு கட்டணம், கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்திற்குரிய வரிசையமைச்சின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு செய்யப்பட்ட 49 நிறுவனங்களுக்குரிய ரூபா 24,143,416 கூட்டுத்தொகையான கணக்காய்வு கட்டணம் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டு 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை 01 மாதம் முதல் 08 வருடம் வரையான காலவீச்சினைக் கடந்திருந்த போதிலும் அவ்வங்கீகாரம் கிடைக்காமையினால் கணக்காய்வு கட்டண சிட்டைகளை விநியோகிப்பதற்கு முடியாதிருந்தது.

**3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

---

02101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகவிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2.66 மில்லியனாக இருந்தது. அந்த நிலுவை மீதிகளுக்கிடையே ரூபா 1.37 மில்லியன் தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து நிலுவையாக கொண்டுவரப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதனை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 335 | 266 | 69 |
| (ii) | மூன்றாம் நிலை | 1,215 | 931 | 284 |
| (iii) | இரண்டாம் நிலை | 174 | 142 | 32 |
| (iv) | ஆரம்ப நிலை | 188 | 154 | 34 |
| | மொத்தம் | 1,912 | 1,493 | 419 |

### (ஆ) வெற்றிடங்கள் காணப்பட்டமை

மீளாய்வாண்டின் இறுதியளவில் திணைக்களத்தின் ஒட்டுமொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 439 ஆக இருந்ததுடன் அதில் 373 பேர் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக நேரடியாக தொடர்புபடும் சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலை உத்தியோகத்தர்களாகும். இதனால் கணக்காய்வு நடவடிக்கைகளை உரிய காலத்திலும், செயற்திறனாகவும் மேற்கொள்வதற்கு தடையாகக் காணப்பட்டன.